GWOP : 44/2023 மற்றும் 45/2023.

நாள் : 08.08.2024

ம.சா. :1

பெயர் : துரைராஜ்

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் BSNL ல் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். எதிர்மனுதாரர் காயத்ரி எனது மருமகள் என்றால் முன்னாள் மருமகள். எதிர்மனுதாரருக்கும் எனது மகன் கணேசனுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் முடிந்தது என்றால் சரி. அவர்களுக்கு திருமணம் எந்த வருடம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. என் மகன் கணேசன் இறக்கும்வரை இருவரும் கூட்டுக்குடும்பமாக ஒன்றாக வாழ்ந்தோம் என்றால் சரி. எனக்கு தற்போது 69 வயதாகிறது. எனக்கு இரண்டு மகன்கள் ஒரு மகள். இரண்டு மகன்களும் இறந்து விட்டார்கள். எனது மனைவிக்கு தற்போது 62 வயதாகிறது. எனக்கு முழங்கால் வலி சுமார் ஒரு வருடகாலமாக இருக்கிறது. கால் ஏன் வீக்கமாக உள்ளது என்றால் கீழே விழுந்து புண்ணாகி ஆறிவிட்டது. காயத்ரி ஹரிகிஷோர், ஹரிராஜ், ஸ்ரீநேந்ரா ஆகியோரின் தாய் என்றால் சரி. எங்கள் வீட்டில் நானும் எனது மனைவியும் ஸ்ரீநேந்ராவும் இருக்கிறோம். என்னைவிட குழந்தைகள் மீது சட்டப்பூர்வமான உரிமை அவர்களது தாயான காயத்ரிக்கு தான் உண்டு என்றால் சரி. ஆனால் காயத்ரிக்கு மறுமணம் ஆகாமல் இருந்தால் அந்த உரிமை உண்டு. காயத்ரிக்கு மறுமணம் ஆகவில்லை என்றாலும் அவர் தனது தாயார் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2013 ல் மறுமணம் செய்து 2023 வரை கும்பகோணம் அருகில் உள்ள சோழபுரத்தில் தனது இரண்டாவது கணவருடன் தான் வாழ்ந்து வந்தார். தனது இரண்டாவது கணவருடன் பிரச்சனை ஏற்பட்டு தற்போது தனது தாய் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. இரண்டாவது திருமணம் செய்துகொண்டு 10 வருடம் அவருடன்தான் வாழ்ந்தார். எனக்கு 69 வயது ஆவதாலும் மூட்டு வலி உள்ளதாலும் குழந்தைகளை என்னால் பராமரிக்க முடியாது என்றாலும் குழந்தைகளை எதிர்மனுதாரரால் தான் கவனிக்க முடியும் என்றால் சரியல்ல. 10 வருடகாலமாக நாங்கள் தான் வளர்த்து வருகிறோம். குழந்தைகளை வளர்க்க சட்டப்படியான உரிமை எதிர் மனுதாரருக்குதான் உள்ளது என்றால் சரியல்ல.. அதனால் நான் போட்ட மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

மனுவை அனுமதிக்க வேண்டும். என் மகன் கணேசன் இறப்பதற்கு முன்பு என் மருமகள் காயத்ரியும் என் மகனும் சந்தோஷமாக தான் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரி. என் மகன் இறந்த பிறகு எதிர்மனுதாரரை மருமகள் போல் நடத்தாமல் வேலைக்காரிபோல் நடத்தியதால் அங்கிருக்க முடியாமல் அவர் அம்மா வீட்டிற்கு போய்விட்டார் என்றால் சரியல்ல. அது உங்கள் கற்பனை. நாங்கள் நன்றாக தான் நடத்தினோம். என் மகன் கணேசன் இறக்கும்போது அவனுக்கு 30 வயது இருக்கும். அப்போது எ ன் மருமகளுக்கு என்ன வயது என்றால் ஞாபகம் இல்லை. 20, 25 வயது இருக்குமா என்றால் 25 வயது இருக்கலாம். தாத்தாவை விட அம்மாவிற்கு தான் குழந்தைகள் மீது அதிக உரிமை உள்ளது என்றால் சரி. ஆனால் அவர் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தால். அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. மனுவை அனுமதிக்க வேண்டும்.